சார்பு நீதிமன்றம், பண்ருட்டி

OS No. 229/2019

வ.சா.1

நாள் : 18.082023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேசன் | | |
| த/ பெ | ரங்கநாதன் | | |
| கிராமம் | வெங்கடாம்பேட்டை | வயது | 54 |
| தாலூக்கா | பண்ருட்டி | தொழில் | விவசாயம் |

2023 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய ம.சா.1 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திருமதி. S.உமா மகேஸ்வரி,பி.ஏ.,எல்.எல்,எம்., சார்பு நீதிபதி(முழு கூடுதல் பொறுப்பு) அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வ.,சா.1 ஆவேன். எனது தரப்பு வழக்கிற்கு ஆதரவாக முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் கூறியவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் கண்டுள்ள சான்றாவணங்கள் பட்டியலில் வரிசை எண் 1 முதல் 16 வரையான ஆவணங்கள் முறையே மனுதாரர் தரப்பு சான்றாவணமாக வ.சா.ஆ.1 முதல் 16 வரையாக குறியீடு செய்யக் கேட்டுக்கொள்கிறேன். மேற்படி ஆவணங்கள் வ.சா.ஆ.1 முதல் 16 வரையாக வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டது. எனவே பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)